2005 பிப்ரவரி 2]

எண்ணிக்கை 750 மட்டுமே இருக்கின்ற காரணத்தினால், போதிய work load அங்கு இருக்காது எனக் கணக்கிடப்பட்டதால், இது பரிசீலனையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை வேறு எந்த அடிப்படையில் அணுகலாம் என்று அரசு பரிசீலித்து, தக்க நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 4, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

4—

தொழில்நுட்பப் பூங்கா

***22541—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை நகரில் இரண்டாவது தொழில்நுட்பப் பூங்காவை அமைக்க அரசு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்; நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியிலே ஒரு சிறிய தவறு இருப்பதாக நான் உணர்கிறேன். கோவை நகரில் இரண்டாவது தொழில்நுட்பப் பூங்கா என்று சொன்னால், ஏதோ முதல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று கோவையிலே இருக்கிறது என்று வரும். தற்போது, அங்கே இரண்டாவது தொழில்நுட்பப் பூங்கா வேண்டுமென்று நான் கோருவதாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். சென்னைக்கே இரண்டாவது தொழில்நுட்பப் பூங்கா இன்னும் வரவில்லை. ஆக, கோவையைப் பொறுத்தமட்டிலே, ஒரு தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கு வேண்டிய எல்லா வசதிகளும் அங்கே இருக்கின்றன...

[2005 பிப்ரவரி 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லட்சுமணன், கேள்வியை நீங்கள்தானே போட்டிருக்கிறீர்கள்? (குறுக்கீடு) கேள்வியை நீங்கள்தான் போட்டிருக்கிறீர்கள்; கேள்வியிலே தவறு இருக்கிறது என்று சொல்கிறீர்களே, ஏன்?

திரு. வி.கே. லட்சுமணன்: இல்லை, இல்லை. நான் சொல்ல இருப்பது, சென்னையை அடுத்து, இரண்டாவது தொழில்நுட்பப் பூங்கா கோவையில் அமைந்தால், அதை வரவேற்கிறோம். ஆனால், அதை அமைப்பதற்கான பணிகள் இன்னும் தொடங்கப்படவில்லை. குஜராத்திலே இரண்டாயிரம் ஏக்கர் பரப்பளவிலே ஒரு பூங்கா ஏற்கெனவே அமைந்திருக்கிறது. கோவை நகரிலே, மென்பொருளைத் தவிர, இன்னும் பல தொழில்களுக்கும் நிறைய வாய்ப்பு இருக்கிறது. குறிப்பாக, Auto components—கார் உதிரிப் பாகங்கள் செய்வதற்கு, ஜவுளித் தொழில் போன்ற தொழில்களுக்கு நிறைய வாய்ப்பு இருக்கிறது. ஆகையினால், புதியதாக அமைய இருக்கிற தொழில்நுட்பப் பூங்காவிலே, மென்பொருள் மட்டுமல்லாமல், மற்ற பொருள்களையும் சேர்த்து அந்தப் பூங்காவை அமைப்பதோடு, அங்கே பயிற்சிபெற்ற தொழிலாளர்களும் தேவைப்படுவதால், அவர்களுக்கு Training Institute ஒன்று அமைக்க அரசு முன்வரவேண்டும்; அதைச் செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் நகரில், இரண்டாவது தொழில்நுட்பப் பூங்கா—Tidel Park—ஐ அமைக்க அரசு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமா என்றுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். நம்முடைய முதல் தகவல் தொழில்நுட்பப் பூங்கா என்று சொல்லும்போது, Tidel Park—ஐச் சொல்லவேண்டும். எனவேதான், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த அனுமானத்தைக் கொண்டு கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள் என்ற அர்த்தத்தில்தான், அரசு பதிலளித்திருக்கிறது. இதில் தவறு ஒன்றுமில்லை. என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்ற கருத்தை இங்கே கேட்டார்கள். நம்முடைய இந்தியத் தொழில் கூட்டமைப்பு—Confederation of Indian Industry-யின் ஒத்துழைப்புடன், நம்முடைய ELCOT நிறுவனமும் சேர்ந்து, ஓர் ஆராய்வு செய்து, அந்த ஆராய்வின் அடிப்படையில், ELCOT நிறுவனம், 2,50,000 சதுர அடி பரப்பளவில், தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கத் திட்டமிடப்பட்டு, இதற்காக அரசு கோயம்புத்தூரில், 29.08 ஏக்கர்

2005 பிப்ரவரி 2]

நிலங்களை, அதாவது 14.5 ஏக்கர் நிலம், அரசாணை எண் 268, வருவாய்த் துறை, நாள் 2-6-2004 மூலமும், 15 ஏக்கர், 100 சென்ட் நிலம், அரசாணை எண் 376, வருவாய்த் துறை, நாள் 11-8-2004 மூலமும், தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க, ELCOT நிறுவனத்திற்கு உரிமை மாற்றம் செய்து, ஆணை வெளியிடப்பட்டுள்ளது. எனவே, அந்த ஆணையின் அடிப்படையிலே, கூட்டுத் துறை முயற்சியில், Tidel Park நிறுவனத்துடன் சேர்ந்து, அந்த Tidel பூங்கா அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முற்பகல் 10-20

இது தவிர, பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் ELCOT நிறுவனத்தோடு சேர்ந்து, ஒரு Memorandum of Understanding—புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டு, அதன்மூலம் 109 ஏக்கர் நிலத்தை, கோயம்புத்தூர் பல்கலைக்கழக வளாகத்தில் அடையாளம் காட்டியது. இந்த பாரதியார் பல்கலைக்கழகம், ELCOT நகரம், தமிழ்நாட்டில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு சேவைகளை ஒருமுகப்படுத்துவதோடு, இதற்காக ஒரு சிறப்பு நோக்கு அமைப்பு—Special Purpose Vehicle அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கட்டுமான ஆலோசனை மதிப்பீட்டின்படி, ஆரம்ப கட்ட மதிப்பீடு ரூபாய் 11 கோடியே 15 இலட்சம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்கான முதல் கட்டப் பணிகளை மேற்கொள்வதற்காக அரசிடம் ELCOT 43 இலட்சம் ரூபாய் கேட்டு இருக்கின்றது. இந்த 43 இலட்சம் ரூபாயை உடனே விடுவிக்கின்றபட்சத்திலே, இந்த 109 ஏக்கர் நிலத்தில், B.U.—அதாவது, Bharathiyar University, ELCOT நிறுவனத்துடன் அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையிலே நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பொதுவாக, இன்றைக்கு மென்பொருள் ஏற்றுமதி வளர்ச்சி என்று சொல்லும்பொழுது, நாம் முந்தைய காலகட்டத்தோடு ஒப்பிடவேண்டும். அதாவது கர்நாடகா, ஆந்திரா என்று சொன்னால், இந்த மூன்றரை ஆண்டுக் காலத்திலே, முன்பாக இருந்தது, மென்பொருள் ஏற்றுமதியிலே; அதேபோல், வன்பொருள்—Hardware export-லே. ஆனால் இந்த மூன்றரை ஆண்டுக் காலத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, மென்பொருள் ஏற்றுமதியிலே மட்டும் கிட்டத்தட்ட 8,000 கோடி ரூபாய் அளவிற்கு மென்பொருள் ஏற்றுமதியை நாம் அடைந்து இருக்கிறோம். அடுத்த ஆண்டு—கர்நாடகாவில் கிட்டத்தட்ட 18,000 கோடி இன்றைக்கு இருக்கலாம்—அவர்களைக் காட்டிலும் 1,000 கோடி

[2005 பிப்ரவரி 2

அதிகமான அளவிற்கு நாம் மென்பொருள் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிற்கு தமிழ்நாட்டிலே நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. அதேபோல், நிறுவனங்கள் என்று சொல்லும்பொழுது, 1999-2000-ல் 500 நிறுவனங்கள் இருந்தன. ஆனால், இன்றைக்கு ஆயிரத்திற்கு மேற்பட்ட நிறுவனங்கள், மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக இன்றைக்குத் தமிழ்நாட்டுக்கு வந்திருக்கின்றன. அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டுமல்லாமல், அமெரிக்காவில் Harvard University என்ற ஒரு பல்கலைக்கழகம் இருக்கிறது. அவர்கள் ஒரு study-யை மேற்கொண்டார்கள், இந்தியா முழுவதும். எந்த மாநிலம் வருங்காலத்திலே முதன்மை பெறுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கும் என்று சொன்னால், அவர்கள் சொன்னது—"that Tamil Nadu is well poised to emerge as the top I.T. State in India as well as a Gateway to South-East Asia". இதைத்தான் உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது தொழில்நுட்பப் பூங்கா—இதைப்பற்றி இங்கே குறிப்பிடுகின்றபோது, அது இனிமேல் வரவிருக்கிற உயிரிப் பூங்காவையும் சேர்த்து, Knowledge Park என்ற முறையிலே அரசு அமைக்க இருக்கிற அந்தப் பூங்காவிற்குத்தான் இரண்டாவது தொழில்நுட்பப் பூங்கா என்று பெயர் சூட்டப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். அமைச்சர் அவர்கள் அதைத்தான் குறிப்பிடுகிறார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குழம்பி இருக்கின்றார்கள் என்று நினைக்கிறேன். அதாவது, Tidel Park—இன்றைக்கு Tidel என்று சொல்வது, TIDCO-வும், ELCOT-ம் சேர்ந்து, joint venture-லே ஏற்படுத்தப்பட்டதுதான் Tidel Park. அதேபோன்றுதான், இரண்டாவது Tidel Park—இங்கே Tidel Park சென்னையிலே இருக்கிறது. இரண்டாவது Tidel Park என்று சொல்வது, கோயம்புத்தூரிலே. அது மென்பொருள், வன்பொருள்—Hardware and Software ஏற்றுமதியிலே அங்கு வந்து அந்த நிறுவனம் அந்தப் பணிகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும். ஆனால் Bio-tech என்பது, அது அந்த இடத்திலே அமைவதற்கு chance இல்லை—வழியில்லை. அது தனியாகத்தான் செய்யப்படும். அதுகுறித்தும் அவர்கள் கேள்வி எழுப்பினால், அதற்கு நான் விடை தருவதற்குத் தயாராக இருக்கிறேன்.

2005 பிப்ரவரி 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.சி. கருணாகரன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. கே.சி. கருணாகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆயிரத்திற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் 8,000 கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட தொகையில் மென்பொருள் ஏற்றுமதியில் கடந்த மூன்று ஆண்டுகளிலே தமிழ்நாடு அரசு சாதனை நிகழ்த்தி இருப்பதாகச் சொன்னார்கள். மகிழ்ச்சி, நன்றி. ஆனால், இந்த இரண்டாவது தகவல் தொழில்நுட்பப் பூங்கா சம்பந்தப்பட்ட வரை, கடந்த இரண்டு ஆண்டு காலமாக இந்தப் பேரவையிலே கேள்வி கேட்கப்பட்டு, தொடர்ந்து அமைச்சர் அவர்களால் பதில் அளிக்கப்பட்டு, விரைவில் துவங்கப்படும் என்று, இதே கோயம்புத்தூர் Tidel Park சம்பந்தமாக சென்ற முறை கேட்டபோதும் சொன்னார்கள். சற்றேறக்குறைய அதே பதிலைத்தான் இப்போதும் தந்திருக்கிறார்களோ என்று நான் அச்சப்படுகிறேன். ஏனென்று சொன்னால், மூன்று ஆண்டுகளில் 8,000 கோடி ரூபாயை எட்டி இருக்கக்கூடிய நம்முடைய ஏற்றுமதி, கோவையிலே அது பணியைத் தொடங்கி இருக்குமானால், அது 20,000 கோடியைத் தாண்டி இருக்கும். இந்த அரசுக்கும் மேலும் கூடுதல் வலு சேர்த்திருக்கும். அப்படிப்பட்ட வாய்ப்பை நாம் இழந்துவிட்டோமோ என்ற கேள்வி எழுகிறது. ஆகவே, இது எப்போது நிறைவுபெறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சற்று நினைவுகூர்ந்து பார்க்கவேண்டும். நான் முன்பு சொன்னது, Tier—II Cities-இல். அதாவது, இரண்டாம் கட்டப் பெருமாநகரங்களை அபிவிருத்தி செய்யும்பொழுது, கோயம்புத்தூர் consider செய்யப்படும் என்றுதான் சொன்னேனேயொழிய, இப்பொழுது நான் சொன்ன பிறகு, இந்த ஒரு வளர்ச்சியை நீங்கள் பார்க்க வேண்டும். நிலம் கையகப்படுத்தப்பட்டு இருக்கின்றது. அரசிடமிருந்து பணம் செல்ல இருக்கின்றது. அங்கே Confederation of Indian Industry, ஏதோ ஒரு பெருநகரம் என்று சொன்னால், அங்குள்ள வாய்ப்புகளை எல்லாம் நாம் அலசி, ஆராய்ந்து பார்த்து அங்கே Tidel Park-ஐப் போல ஒன்றை அமைக்க முடியுமா என்ற அந்த சாத்தியக்கூறுகளை எல்லாம் ஆராய்ந்த பிறகுதான் முடிவு எடுக்க முடியுமேயொழிய, ஏதோ

பொத்தாம்பொதுவாக நாம் எல்லா இடத்திலேயும் ஆரம்பிப்பது என்பது சாத்தியம் அல்ல. எனவே, CII, ELCOT சேர்ந்து, அவர்கள் ஆராய்வு மேற்கொண்டதன் அடிப்படையில்தான் அங்கு வந்து அமைக்கக்கூடிய அளவிற்கு, அங்கு நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன என்ற கருத்தைச் சொன்னதன் அடிப்படையிலே, நிலங்கள் எல்லாம் கையகப்படுத்தப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எனவே, எவ்வளவு விரைவில் இது வர முடியுமோ, அந்த அளவிற்கு விரைவில் வருவதற்கு வேண்டிய நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா எண் 5, திரு. கு. அண்ணாமலை, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

5—

பகுதிநேர நியாய விலைக் கடை

***20487—திரு. கு. அண்ணாமலை:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவுடையனூர் ஊராட்சி, சின்னநாடானூரில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலாவதாக, என்னை இந்த அவையிலே அமைச்சராக்கி, உறுப்பினர்களுடைய கேள்விக்குப் பதில் அளிக்க நல் அனுமதியைத் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவன்பான நன்றியினை அவர்களுடைய பாதங்களிலே காணிக்கையாக்கி, உறுப்பினருடைய கேள்விக்கு விடையளிக்கிறேன்: (அ) இல்லை. (ஆ) கேள்வி எழவில்லை.